**<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>**
**<u>மேட்டூர் நகராட்சி</u>**

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 26.05.2020 ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

**<u>மன்றப் பொருள்</u>**

1.மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினந்தோறும் குடிநீர் விநியோகம் செய்ய லிக்யூட்குளோரின் சிலிண்டர்கள் கெம்ப்ளாஸ்ட் சன்மார் நிறுவனத்திடமிருந்து பெற்று பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2020-2021ம் ஆண்டிற்கு மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து வாங்கி பயன்படுத்த உத்தேச செலவினம் ரூ.3,50,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1484/2020/இ1)**

**தீர்மான எண். 90 நாள். 26.05.2020**

**<u>அனுமதிக்கப்பட்டது</u>**

**2.** கோவிட்-19 குறித்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், சேலம், காவல் கண்காணிப்பாளர்,சேலம். நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் சேலம், துணை இயக்குனர், சுகாதாரப் பணிகள் , சேலம். சார் ஆட்சியர் மேட்டூர் ஆகியோர்கள், மேட்டூர் நகரில் நோய் தொற்று ஏற்பட்டுள்ள பகுதிகளை பார்வையிடப்பட்ட வகையிலும், திருமதி. திலகவதி என்பவருக்கு எவ்வித அறிகுறி இல்லாமலும் நோய் தொற்று ஏற்பட்டுள்ளது குறித்தும், மேலும் மேட்டூர் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்த திரு.லட்சுமி காந்தன் இவர் ஓமலூரில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். அவர் சொந்த வேலையாக சேலம் நகர் பகுதிகளில் சென்று வந்த நிலையில் கொரோனா தொற்று சந்தேகிக்கப்படும் வகையில் அவருக்கு ரத்தம் மற்றும் சளி பரிசோதனை செய்யப்பட்டு ஆய்வக தகவல் வராதபட்சத்தில் தனது இருசக்கர வாகனத்தில் மேட்டூர் வந்து பல்வேறு இடங்களுக்கு சென்று வந்திருக்கும் நிலையில் துணை இயக்குனர் சுகாதார பணிகள் அலுவலகம் மூலம் இவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. எனவே இத்தொற்றானது மேட்டூரிலிருந்து பரவியதா இல்லை. சேலம் பகுதியிலிருந்து பரவியதா என சந்தேகம் ஏற்படும் வகையில் இருந்தன. மேலும் இந்நோய் தொற்றை போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வரும் பணிகளைவிட, கூடுதலாக மேலும் நோய் தடுப்பு பணிகளை தீவிரமாக மேற்க்கொள்ள வேண்டும். எனவும் கூடுதலாக 5 எண்ணிக்கை தனியார் மினி ஆட்டோக்களை நாள் வாடகைக்கு அமர்த்தி மருந்து தெளிப்பு பணிகளை முடுக்கி விட வேண்டும் எனவும், மேற்கண்ட அலுவலர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டன. எனவே மேற்காணும் மாவட்ட அலுவலர்களின் அறிவுரைகளின் படி, நோய் தொற்று தடுப்பு பணிகளை போர்க்கால அடிப்படையில் துரித நடவடிக்கைகள், மூலம் மேற்கொள்ள 5 எண்ணிக்கை ஆட்டோக்கள் நாள் வாடகைக்கு புதியதாக அமர்த்தவும், அதற்காகும் செலவினத்தை கோவிட்-19 குறித்து அரசிடம் இருந்து வரப்பெறப்படும் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2.** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகள் கோவிட் - 19 கொரோனா வைரஸ் நோய் தொற்றானது மேலும் பரவாமல் தடுக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கையான மாவட்ட நிர்வாகம் சார்ந்த அலுவலர்களின் அறிவுரைகளின் படி மருந்து அடிக்கும் பணிக்கு மினி ஆட்டோக்கள் 5 எண்ணிக்கை நாள் வாடகைக்கு அமர்த்தி கோவிட் தடுப்பு பணிக்கு உட்படுத்தவும், அதற்காக ஆகும் செலவினத்தை கோவிட் - 19 குறித்து வரப்பெறப்படும் நிதியில் செலவினம் மேற்க்கொள்ளவும் இப்பணிக்கு பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர்

அவர்களின் முன் அனுமதியின் பேரில் விலைப்புள்ளிகள் பெறப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.1232/2020/எச்1)**

**தீர்மான எண். 91 நாள். 26.05.2020**

**அனுமதிக்கப்பட்டது**

3. கோவிட்-19 குறித்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், சேலம், காவல் கண்காணிப்பாளர், சேலம். நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் சேலம், துணை இயக்குனர், சுகாதாரப் பணிகள், சேலம். சார் ஆட்சியர் மேட்டூர் ஆகியோர்கள், மேட்டூர் நகரில் நோய் தொற்று ஏற்பட்டுள்ள பகுதிகளை பார்வையிடப்பட்ட வகையிலும், திருமதி. திலகவதி என்பவருக்கு எவ்வித அறிகுறி இல்லாமலும் நோய் தொற்று ஏற்பட்டுள்ளது குறித்தும், மேலும் மேட்டூர் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்த திரு.லட்சுமி காந்தன் இவர் ஓமலூரில் வசித்து வருகிறார். அவர் சொந்த வேலையாக சேலம் நகர் பகுதிகளில் சென்று வந்த நிலையில் கொரோனா தொற்று குறித்து சந்தேகிக்கப்படும் வகையில் அவருக்கு ரத்தம் மற்றும் சளி பரிசோதனை செய்யப்பட்டு ஆய்வக தகவல் வராதபட்சத்தில் தனது இருசக்கர வாகனத்தில் மேட்டூர் வந்து பல்வேறு இடங்களுக்கு சென்று வந்திருக்கும் நிலையில் துணை இயக்குனர் சுகாதார பணிகள் அலுவலகத்தில் அவர்கள் மூலம் இவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. எனவே இத்தொற்றானது மேட்டூரிலிருந்து பரவியதா இல்லை. சேலம் பகுதியிலிருந்து பரவியதா என சந்தேகம் ஏற்படும் வகையில் இருந்தன. மேலும் இவ் நோய் தொற்றை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் புதிய உத்திகளை கையாள வேண்டிய நிலையில் போர்க்கால அடிப்படையில் பணிகளை, தற்பொழுது எடுக்கப்பட்டு வரும் தடுப்பு நடவடிக்கைகளுக்கு விட கூடுதலாக மேலும் நோய் தடுப்பு பணிகளை தீவிரமாக மேற்க்கொள்ள வேண்டும். எனவும் கூடுதலாக 5 எண்ணிக்கை மினி ஆட்டோக்களை நாள் வாடகைக்கு அமர்த்தி, மருந்து தெளிப்பு பணிகளை முழுவீச்சில் மேற்கொள்ள வேண்டும் எனவும், மேற்கண்ட மாவட்ட துறை அலுவலர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டன. எனவே மேற்காணும் மாவட்ட அலுவலர்களின் அறிவுரைகளின் படி நோய் தொற்று தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், புதியதாக 5 எண்ணிக்கை ஆட்டோக்களை அமர்த்தப்படும் பட்சத்தில் அதற்கான சோடியம் ஹைபோகுளோரைடு கரைசல், நாளது தேதியில் 1010 லிட்டர் மட்டுமே இருப்பில் உள்ளது. எனவே இம்மருந்து பற்றாக்குறையாக உள்ளதால், பொதுசுகாதாரம் அவசரம் அவசியம் கருதி 6000 லிட்டர் சோடியம் ஹைபோகுளோரைடு விலைப்புள்ளிகள் மூலம் கொள்முதல் செய்யவும், இதற்காக தயாரிக்கப்பட்ட மதீப்பீட்டு தொகை லிட்டர் 1-க்கு ரூ30/- வீதம் 6000 லிட்டருக்கான தொகை (6000x30=1,80,000/-) ஆகும் எனவும், இச்செலவினத்தை கோவிட்-19 குறித்து அரசிடம் இருந்து வரப்பெறப்படும் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. கோவிட்-19 கொரோனா வைரஸ் தொற்றை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் போர்க்கால அடிப்படையில் நோய் தடுப்பு பணிக்கு மேற்கொள்ளும் பொருட்டு தேவையான சோடியம் ஹைபோகுளோரைடு 6000 லிட்டர் கொள்முதல் சேய்யவும், அதற்காக தயாரிக்கப்பட்ட தோரயமதிப்பீடு தொகையான ரூ.1,80,000/- க்குள் செலவினம் மேற்க்கொள்ளவும், இச்செலவினத்தை நகராட்சி கோவிட்-19 குறித்து வரப்பெறப்படும் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும், இப்பணிக்கு பொதுசுகாதாரம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் விலைப்புள்ளிகள் கோருவதற்கு மன்றம் அனுதிக்கலாம்.

**(ந.க.எண்.1232–2/2020/எச்1)**

**தீர்மான எண். 92 நாள். 26.05.2020**

**அனுமதிக்கப்பட்டது**

4. கோவிட்- 19 கொரோனா வைரஸ் தொற்றை தடுக்கவும், கட்டுப்படுத்தும் பணிக்காக மருந்துகளை அடிக்கும் பணிக்கு தற்காலிகமாக நாள் வாடகைக்கு ஆட்டோக்களை பயன்படுத்தும் பணிக்காக 01.05.2020-ந்தேதி விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் 02.05.2020-ந் தேதி கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப் பெறப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு.

| வ. எண். | விலைப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | நாள் 1-க்கு வாடகை விலைப்புள்ளி தொகை ரூ. பை. | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1. | M/s.விநாயகா டிராவல்ஸ்,<br>மாதா கோவில் சமீபம்,<br>மேட்டூர் அணை | ரூ.2400/- | அதிகம் |
| 2. | M/s.பண்ணாரியம்மன் டிரான்ஸ் போர்ட் ,<br>147, பெரியண்ணன் நகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.2100/- | குறைவு |
| 3. | M/s.குமார் டிராவல்ஸ்,<br>ஓர்க்ஷாப் கார்னர்,<br>மேட்டூர் அணை | ரூ.2550/- | அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கோவிட்- 19 தடுப்பு குறித்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண். 2-ல் காணும் M/s.பண்ணாரியம்மன் டிரான்ஸ் போர்ட் , 147, பெரியண்ணன் நகர், மேட்டூர் அணை. என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கியுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில், பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதி சப்ளை உத்திரவு வழங்கப்பட்டமைக்கு, மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1232–2/2020/எச்1)**

**தீர்மான எண். 93 நாள். 26.05.2020**

**அனுமதிக்கப்பட்டது**

5. கோவிட்- 19 கொரோனா வைரஸ் தொற்றை தடுக்கவும், கட்டுப்படுத்தவும், பொது இடங்கள், நோய் தொற்று கண்டறியப்பட்டுள்ள பகுதிகள், தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் கிருமி நாசினி மருந்துகளை கம்பரசர் பவர்ஸ் ஸ்பிரேயர் தெளிப்பின் மூலம் தெளிப்பு பணிக்கு தேவையான சோடியம் ஹைபோகுளோரைடு கிருமி நாசினி மருந்தினை கொள்முதல் செய்ய 01.05.2020-ந் தேதி விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் 02.05.2020-ந் தேதி கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப் பெறப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் கீழ்க்கண்டுள்ளவாறு.

| வ. எண். | விலைப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | 1 லிட்டர் சோடியம் ஹைபோகுளோரைடு விலைப்புள்ளி விலை ரூ. பை. | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1. | M/s.தனுஸ்ரீ ஏஜென்சிஸ்,<br>13, ஈஸ்வரன் பிள்ளை தெரு,<br>ஈரோடு. | ரூ.25.50/- | அதிகம் |
| 2. | M/s.ஹேமலதா,<br>7, செங்குந்தபுரம், 9 வது கிராஸ்,<br>கரூர். | ரூ.25.00/- | அதிகம் |
| 3. | M/s.சத்யா ஏஜென்ஸிஸ்,<br>4/152, மதுரை வீரன் கோவில் தெரு,<br>T.செல்லாண்டிபாளையம்,<br>கரூர். | ரூ.23.60/- | குறைவு |

அலுவலக குறிப்பு:—

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கோவிட்- 19 குறித்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண். 3-ல் காணும் M/s.சத்யா ஏஜென்ஸிஸ், 4/152, மதுரை வீரன் கோவில் தெரு, T.செல்லாண்டிபாளையம், கரூர். என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கியுள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில், பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதி சப்ளை உத்திரவு வழங்கப்பட்டமைக்கு, மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1232/2020/எச்1)**

**தீர்மான எண். 94 நாள். 26.05.2020**

அனுமதிக்கப்பட்டது

6. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், சேலம் அவர்களின் அறிவுரைகளின்படி கோவிட்-19 கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்கவும், அதிகப்படியான பொது மக்கள் கூடுமிடங்கள், தினசரி சந்தைகள், உழவர் சந்தை, அரசு மருத்துவமனைகள் மற்றும் பொது மக்கள் குடியிருப்பு பகுதிகளில் பவர் கம்பரசர் ஸ்பிரேயர் மூலம் தெளிக்க பயன்படுத்தப்படும் லைசால் நாளது தேதியில் இருப்பு மிகவும் குறைவாகவும், உடல் பாதுகாப்பு உடைகளும் இருப்பு மிகவும் குறைவாகவும் உள்ளது. எனவே தொடர்ந்து கோவிட்-19 தடுப்பு பணிகளை மேற்கொள்ள லைசால் 5% 2000 லிட்டருக்கும், உடல் பாதுகாப்பு உடை 100 எண்ணிக்கை கொள்முதல் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே இதற்கு முன்பே ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் என்ற நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட விலைப்புள்ளி தொகைக்கு லைசால் 5 % லிட்டர் 1-க்கு ரூ 196/-க்கும், முழு உடல் பாதுகாப்பு உடை 1-க்கு ரூ 980/-க்கும், கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் விலைப்புள்ளி தொகைக்குட்பட்டு மேற்கானும் நிறுவனத்திடமிருந்து 2000 லிட்டர் லைசால் மருந்தும் கொள்முதல் செய்ய ரூ 3,92,000./ க்கும் முழு உடல் பாதுகாப்பு உடை 100 எண்ணிக்கை ரூ 98,000/-க்கும் ஆக மொத்தம் ரூ 4,90,000./க்கு கொள்முதல் செய்யவும், அதற்கான செலவினத்தை கோவிட் - 19 குறித்து வரப்பெறப்படும் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் சப்ளை உத்திரவு வழங்கவும், மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:—

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கோவிட் - 19 கொரனோ வைரஸ் நோய் தொற்றை தடுக்கவும், கட்டுப்படுத்தவும், பொது மக்கள் அதிகப்படியான பயன்படுத்தப்படும் இடங்கள், அரசு சார்ந்த அலுவலகங்கள், குடியிருப்பு பகுதிகளில் கிருமி நாசினி தெளிக்க லைசால் மருந்து 2000 லிட்டரும், உடல் பாதுகாப்பு உடை 100 எண்ணிக்கையும், இதற்கு முன்பு ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட விலைப்புள்ளி தொகைக்கே கொள்முதல் செய்யவும், அதற்கான செலவினத் தொகையான ரூ. 4,90,000/-ஐ கோவிட்- 19 குறித்து அரசிடமிருந்து வரப் பெறப்படும் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று சப்ளை உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1232/2020/எச்1)**

**தீர்மான எண். 95 நாள். 26.05.2020**

அனுமதிக்கப்பட்டது

7. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், சேலம் அவர்களின் அறிவுரைகளின்படி கோவிட்-19 கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்கவும், பொது மக்களுக்கு உடல் தற்காப்பு ஊக்கத்தினை பெற கபசுர குடிநீர் சூரணம் பொது மக்களுக்கு காய்ச்சி விநியோகம் செய்ய திண்டுக்கல் நேதாஜி பார்மஸி நிறுவனம் மூலம் 500 கிராம் கொண்ட 100 பாக்கெட்டுகள் வரப்

பெறப்பட்டுள்ளன. அவ்வாறு வரப்பெற்ற கபசுர குடிநீர் சூரணத்திற்கு உரிய பட்டியல் தொகையான ரூ.40,950/- ஐ வழங்குமாறு பட்டியல் வரப்பெறப்பட்டுள்ளன. எனவே வரப்பெற் பட்டியல் தொகை ரூ. 40, 950/- ஐ கோவிட் -19 குறித்து அரசிடமிருந்து வரப் பெறப்படும் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கோவிட்- 19 கொரனோ வைரஸ் தொற்று பரவலை தடுக்க பொது மக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி உருவாக்கவும், உடலை தற்காத்து கொள்ளவும், கபசுர குடிநீர் சூரனம் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்ட திண்டுக்கல் M/s. நேதாஜி பார்மஸி என்ற நிறுவனத்தின் மூலம் வரப்பெற்ற கபசுர சூரணம் 500 கிராம் கொண்ட 100 பாக்கெட்டுகள் சப்ளை செய்யப்பட்டதற்கான உரிய பட்டியல் தொகையான ரூ.40,950/- ஐ கோவிட் - 19 குறித்து அரசிடமிருந்து வரப்பெறப்படும் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள, மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1232/2020/எச்1)**

**தீர்மான எண். 96 நாள். 26.05.2020**

**அனுமதிக்கப்பட்டது**

8. சேலம் மாவட்ட ஆட்சியர் மற்றும் தலைவர் கொடி நாள் நிதிக்குழு சேலம் அவர்களின் செயல்முறை ஆணையின்படி முன்னாள் படைவீரர் நலனுக்காக ஆண்டு தோறும் கொடி நாள் நிதி வசூல் செய்ய குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் தொகையை வசூல் செய்யும் பொருட்டு இந்நகராட்சியின் கீழ்கண்ட இனங்களுக்கு 01.06.2020 முதல் கீழ்க்கண்ட விவரப்படி

| வ.எண் | இனம் | கொடி நாள் தொகை |
|---|---|---|
| 1. | புதியதாக சொத்துவரி விண்ணப்பம் | ரூ.100/– |
| 2. | சொத்துவரி பெயர் மாற்றும் விண்ணப்பம் | ரூ.100/– |
| 3. | புதிய குடிநீர் இணைப்பு விண்ணப்பம் | ரூ.100/– |
| 4. | குடிநீர் இணைப்பு பெயர் மாற்றும் விண்ணப்பம் | ரூ.100/– |
| 5. | கட்டிட வரைபடம் அனுமதி விண்ணப்பம் | ரூ.100/– |
| 6. | ஒப்பந்ததாரர் உரிமம் புதுப்பித்தல் விண்ணப்பம் | ரூ.500/– |
| 7. | தொழில் வரி விண்ணப்பம் | ரூ.100/– |
| 8. | அபாயகரமானதும் அருவருக்க தக்க இனம் | ரூ.50/– |

நகரரட்சி கருவூலம் மூலம் விண்ணப்பதாரர்களிடமிருந்து வசூல் செய்து அத்தொகையினை உதவி இயக்குனர், மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம் அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.317/2020/சி1)**

**தீர்மான எண். 97 நாள். 26.05.2020**

**அனுமதிக்கப்பட்டது**

9. இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு 2020-2021ஆம் ஆண்டிற்கு அஞ்சல் வில்லைகள் வாங்கி கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1172/2018/டி1)**

**தீர்மான எண். 98 நாள். 26.05.2020**

**அனுமதிக்கப்பட்டது**

10. இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் 2012-13ன் கிழ் பையோமெத்தனேஷன் பிளாண்டிற்கு சுற்றுச்சுழல் பொறியாளர், மாசுகட்டுபாடு வாரியம் சேலம் அவர்களின் கடிதம் எண்.FSLM1918/RS/DEE/TNPCB/SLM/2020 நாள்.04.05.2020ல் தெரிவித்துள்ளபடி 2020-2021க்குண்டான Water act & Aur act மற்றும் நிலுவைத் தொகை ரூ.75300/- (எழுபத்து ஐந்தாயிரத்து முன்னூறு மட்டும் ) செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.5254/2012/இ1)**

**தீர்மான எண். 99 நாள். 26.05.2020**

**அனுமதிக்கப்பட்டது**

11. இந்நகராட்சியில் மாதையன்குட்டை சுடுகாடு தகனமேடைக்கு சுற்றுச்சூழல் பொறியாளர் மாசு கட்டுபாட்டு வாரியம், சேலம் அவர்களின் கடிதம் எண்.FSLMO719/GS/DEE/TNPCB/SLM/2020 நாள்.16.03.2020ல் தெரிவித்துள்ளபடி 2020-2022க்குண்டான Water act & Air act மற்றும் நிலுவைத் தொகை ரூ.20400/-ஐ (இருபதாயிரத்து நானூறு மட்டும் செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.9957/2006/இ1)**

**தீர்மான எண். 100 நாள். 26.05.2020**

**அனுமதிக்கப்பட்டது**

12.பொது சுகாதாரம் தற்பொழுது தென் மேற்கு பருவ மழை தமிழகத்தை ஒட்டியுள்ள கேரளா கர்நாடகா போன்ற மாநிலங்களில் துவங்கி விட்டதாலும், இதனால் பூச்சிகளால் பரவக்கூடிய சிக்கன் குனியா, டெங்கு போன்ற நோய்களை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் விதமாக, ஏடிஎஸ் முதிக் கொசுக்களை கட்டுப்படுத்தும் பணிக்கு தேவையான 2 லிட்டர் கொள்ளளவு கொண்ட கையினால் சிலிண்டரை பொருத்தி புகை மருந்து அடிக்கும் பணிக்கு தேவையான 4 எண்ணிக்கை ( Hand Fogging Machine) னும் அதற்கு தேவையான சிலிண்டர்கள் 250 எண்ணிக்கைகளும், கொள் முதல் செய்ய தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ.2,20,000/-ஆகும். எனவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2. பொது சுகாதாரம் பூச்சிகளால் பரவக்கூடிய சிக்குன் குனியா, டெங்கு போன்ற நோய்களை பரப்பும் ஏடிஎஸ் முதிர் கொசுக்களை ஒழிப்பு மற்றும் தடப்பு பணிக்கு தேவையான 2லிட்ட கொள்ளளவு கொண்ட சிலிண்டரை பொருத்தி கையினால் தூக்கி இயக்கப்படும் புகை போக்கி இயந்திரம் 4 எண்ணிக்கை, சிலிண்டர் கிட் 250 எண்ணிக்கைகளும் கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகையான ரூ.2,20,000/-க்குள் செலவினம் மேற்க்கொள்ளவும், இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் இப்பணிக்காக விலைப்புள்ளிகள் கோருவதற்கு மன்றம் பரிசீலித்து அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1437/2020/எச்1)**

**தீர்மான எண். 101 நாள். 26.05.2020**

**அனுமதிக்கப்பட்டது**

13. மேட்டூர் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் வருடாந்திர பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணிக்கு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, 15.02.2019ல் ஒப்பந்ததாரர் திரு.ம.கோவிந்தன் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு 2018ம் ஆண்டு பிப்ரவரி மாதத்துடன் முதல் வருடம் முடிவடைந்து ஒரு ஆண்டிற்கு பராமரிப்பு தொகை ரூ.17.06 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.626 நாள்.22.09.2016ல் அனுமதி பெறப்பட்டு இராண்டாம் ஆண்டிற்கான பராமரிப்பு தொகை ரூ.17.06 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.46 நாள்.28.02.2017 மற்றும் 2019ம் ஆண்டிற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.8 நாள்.11.01.2019ல் பெறப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்கண்ட பராமரிப்பு பணி பிப்ரவரி மாதத்துடன் முடிவடைந்ததால், மேலும் மூன்று மாதங்களுக்கு பணியினை நீட்டிப்பு செய்ய நகர்மன்ற தீர்மான எண்.48 நாள்.28.02.2020ல் பெறப்பட்டு மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 2019–2020ம் ஆண்டு செந்தூர விலை விகித பட்டியலின் படி மேற்கொள்ள திட்ட பிரேரணை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையராக அலுவலகத்தில் நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது கொரோனா வைரஸ் Covid 19 பரவுதலை தடுக்கும் பொருட்டு நாடு முழுவதும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால், நிர்வாக அனுமதி பெற இயலாத நிலையில் உள்ளது.

எனவே, பழைய விலைவிகித அடிப்படையில் அதே ஒப்பந்ததாரர் மூலம் (திரு.கே.கோவிந்தன்) மேலும் மூன்று மாதங்களுக்கு (ஜீன், ஜீலை மற்றும் ஆகஸ்ட்) பணியை நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்ம்

**(ந.க.எண்.4495/2016/இ1)**

**தீர்மான எண். 102 நாள். 26.05.2020**

**அனுமதிக்கப்பட்டது**

**ஆணையாளர் (ம) தனி அலுவலர்,**
**மேட்டூர் நகராட்சி.**